Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No.402 / 2024

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| Name: | பூபதி | Calling: | ரயில்வே ஸ்டேசன் மேனேஜர் (ஓய்வு) |
|---|---|---|---|
| Father's Name: | அருணாச்சலம் | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 62 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 07.02.2025

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 126(2) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

ம.சா.1 குறுக்கு விசாரணை

எதிரியை எனக்க எப்படி தெரியும் என்றால் என்னுடன் பணிபுரிந்த சக ஊழியர் என்பதால் தெரியும். எதிரியை எவ்வளவு நாள்களாக தெரியும் என்றால் 5 வருடமாக தெரியும். எதிரியின் சொந்த ஊர் தெரியுமா என்றால் அவர் திருச்சியை சேர்ந்தவர் என்று எதிரி கூறியதை வைத்து தெரியும். எதிரி தற்போது ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் Chief Loco Inspector ஆக பணிபுரிகிறார். எதிரி எவ்வளவு ஊதியம் வாங்குகிறார் என்பதும், அவரது பணி விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், தோராயமாக ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் வாங்குவார். நாங்கள் இருவரும் ஒன்றாக ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் பணிபுரிந்தோமா என்றால் ஆமாம். எதிரியை யாராவது அறிமுகப்படுத்தினார்களா அல்லது தொழில் ரீதியாக நாங்களே நண்பர்களாகினோமா என்றால் தொழில் ரீதியாக நண்பர்களானோம். நான் ஓய்வு பெறுவதற்கு முன்பு எனக்கும் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இருந்தது.

எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார், யார் மூலமாக கேட்டார் என்றால் 2024 ஜனவரி மாதத்தில் எதிரியும் அவரது மனைவி நதியா என்பவரும் எனது வீட்டிற்கு வந்து ரூ.7 லட்சம் பணம் கேட்டார்கள். மேற்படி விவரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்திலோ, புகாரிலோ கூறியுள்ளேனா என்றால் கூறியிருக்கிறேன். நான் மேற்படி விவரத்தை நான் கூறுவதுபோல் பிரமாண வாக்குமூலத்திலோ, புகாரிலோ கூறவில்லை, வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. பணம் கொடுக்கும்போது யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் யார் முன்னிலையிலும் கொடுக்கவில்லை. பணம் கொடுத்ததற்கு எதிரி என்ன ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் செக் எழுதி கொடுத்தார். நிரப்பப்படாத காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல, நிரப்பி தான் கொடுத்தார்.

எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், எதிரி என்னிடம் அவர் பெயரிலும், அவரது மனைவியின் பெயரிலும் ரூ.5,00,000ற்கான சீட்டு கட்டி கொண்டிருந்தார் என்றாலும், அந்த சீட்டு எடுக்கும்போது அதற்காக 2 காசோலை மற்றும் ஒரு கடனுறுதி சீட்டு எதிரியால் கொடுக்கப்பட்டது என்றாலும் அவ்வாறு கொடுக்கப்பட்ட காசோலை தான் இவ்வழக்கு காசோலை என்றாலும் சரியல்ல. இருவர் பெயரிலும் சீட்டு கட்டிக்கொண்டிருந்தது உண்மை தான், அது முடிந்துவிட்டது, அந்த சீட்டிற்காக நான் காசோலை வாங்கவில்லை. பொதுவாக சீட்டிற்காக நான் யாரிடமும் காசோலை வாங்குவதில்லை. சீட்டு முடிந்த பின்னும் நான் காசோலையை எதிரியிடம் திருப்பி தரவில்லை, அந்த காசோலைகளை வைத்து தான் எதிரிக்கு எதிராக நான் 2 காசோலை வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக சீட்டு எடுப்பவரிடம் நான் காசோலை வாங்குவேன் என்றால் நட்புரீதியாக நான் சீட்டு நடத்தியதால் நான் அதுபோல் காசோலை வாங்குவதில்லை.

நான் ஓய்வு பெற்ற பிறகும் சீட்டு நடத்தி வருகிறேன் என்றால் சின்ன சின்ன சீட்டுகளை நடத்தி வருகிறேன். பணியிலிருக்கும்போதும் சீட்டு நடத்தி வந்தேன் என்றால் 2 சீட்டுகள் நடத்தினேன். நான் பலவருடமான சீட்டு நடத்தி வருகிறேன் என்றாலும், என்னிடம் சீட்டு எடுப்போரிடம் அதற்கு செக்யூரிட்டிக்காக காசோலையை வாங்குவது எனது பழக்கம் என்றாலும், அவ்வாறு பல நபர்களிடம் காசோலையை பெற்று இதே நீதிமன்றத்தில் அவர்கள் பெயரிலும் வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றாலும் சரியல்ல, நான் பணம் கொடுத்தவர்களிடம் மட்டும் தான் காசோலை வாங்கியுள்ளேன். இந்த நீதிமன்றத்தில் எத்தனை காசோலை வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5 முதல் 7 வழக்குகள் வரை தாக்கல் செய்துள்ளேன். எதிரிக்கு நான் கொடுத்துள்ள ரூ.7 லட்சத்திற்க வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையில் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் வருமான வரி செலுத்தியிருப்பேன் என்றாலும், சீட்டு பணத்திற்காக கொடுத்த காசோலை பணத்திற்காக தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பதாலும், உண்மையில் நான் பணம் கொடுக்கவில்லை என்பதாலும் தான் நான் வருமான வரி செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. சீட்டு நடத்துவதற்கு நான் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மணி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) D.Ravi,
Judicial Magistrate (FAC), Vaniyambadi.